**வாக்குமூலம்**

**நீதித்துறை நடுவர் எண்.3 நீதிமன்றம், ஈரோடு**

**வழக்கு எண்.சி.சி.எண்.73/2021**

**வழக்கு சாட்சி.அ.சா.3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வேலுமுத்து | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | செம்பண்ணன் | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

(வழக்கின் எதிரி ஆஜர் இல்லை. எதிரியின் சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.02.2025**

முதல் விசாரணை

நான் தமிழ்நாடு காவல் துறையில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து, தற்போது ஓய்வு பெற்று, பவானியில் வசித்து வருகிறேன்.

கடந்த 15.10.2019-ம் தேதி அன்று நான் நிலைய அலுவலில் இருந்தபோது, நிலையம் ஆஜராகி ஜெகதீசன், த/பெ.சிவானந்தம் என்பவர் கொடுத்த எழுத்து மூலமான புகாரைப் பெற்று, அதன் அடிப்படையில் நிலைய குற்ற எண்.530/2019 சட்டப்பிரிவுகள் 454, 380 இதசவின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சம்பவ இடம் சென்று, சம்பவ இட சாட்சிகளான பரமேஷ்வரன், சண்முகம் ஆகியோர் முன்னிலையில், பார்வை மகஜர், மாதிரி வரைபடம் ஆவணங்களை தயார் செய்தேன். பார்வை மகஜர் **அ.சா.ஆ.4**

ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.**5** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. சாட்சிகளை விசாரித்து, வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் வழக்கின் புகார்தாரரான ஜெகதீசன், கேள்விப்பட்ட விஜயலட்சுமி, வனிதாதேவி, மகேஸ்வரி, கந்தசாமி ஆகியோரை விசாரித்து, வாக்குமூலம் பதிவு செய்தேன். வழக்கின் முதல் கட்ட புலன் விசாரணை முடித்து, வழக்கு கோப்புகளை ஆய்வாளர் கதிர்வேல் அவர்களுக்கு அனுப்பி வைத்தேன்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

நீங்கள் சொன்ன தேதியில், சொன்ன விதத்தில் புகார் பெறப்படவில்லை என்றாலும், அதன் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றாலும், சரியல்ல. நீங்கள் தயார் செய்த முதல் தகவல் அறிக்கையில் பொது நாட்குறிப்பு விபரம் பூர்த்தி செய்யப்படவில்லை என்றால், சரிதான். முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட நேரம் பூர்த்தி செய்யப்படவில்லை என்றால், சரிதான். முதல் தகவல் அறிக்கை 4 நாட்கள் காலதாமதமாக தான் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது என்றால், சரிதான். நீங்கள் தயார் செய்த பார்வை மகஜரில் வீட்டின் கதவு, பீரோ உடைக்கப்பட்டு இருந்தாக குறிப்பிடப்படவில்லை என்றால், சரியல்ல.

2. நீங்கள் சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில் பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றால், சரியல்ல. நீங்கள் விசாரித்த சாட்சிகளான அ.சா.1 ஜெகதீசன், விஜயலட்சுமி, வனிதாதேவி, மகேஸ்வரி இவர்கள் அனைவரும் பூட்டு உடைக்கப்பட்டிருந்ததாக உங்களிடம் வாக்குமூலம் அளித்துள்ளார்கள் என்றால், சரிதான். நீங்கள் சொன்ன தேதியில்,

சொன்ன நேரத்தில் வழக்கின் சாட்சிகளை விசாரித்து, வாக்குமூலம் பெறவில்லை என்றால், சரியல்ல.

எதிரி தரப்பு மறு விசாரணை

இல்லை.